

# தமிழ்நாடு மாநிலத்திற்கான நகர்ப்புற பசுமையாக்கல் கொள்கை 2026



திரு **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# அட்டவணை


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | 2 |
| 2. | தொலைநோக்கு பார்வை | 3 |
| 3. | திட்டம் | 3 |
| 4. | நோக்கம் | 4 |
| 5. | இலக்குகளும் குறிக்கோள்களும் | 4 |
| 6. | வழிகாட்டு நெறிமுறைகள் | 5 |
| 7. | நிறுவனக் கட்டமைப்பு | 6 |
| 8. | நிதி சார்ந்த ஏற்பாட்டு முறை | 8 |
| 9. | உத்திகள் மற்றும் செயல் திட்டம் | 9 |
| 10. | கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையளித்தல் | 11 |
| 11. | முக்கிய சொற்களின் விளக்கம் | 13 |

# 1. முகவுரை

தமிழ்நாடு, அதிகளவில் நகரமயமாக்கப்பட்ட இந்திய மாநிலங்களில் ஒன்றாகும். இதன் நகர்ப்புற மக்கள் தொகை 2031 - ஆம் ஆண்டிற்குள் 67 விழுக்காடு அளவினை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது. விரைவான நகரமயமாக்கல் மற்றும் தொழிற்சாலை மற்றும் வாகனப்புகை வெளியேற்றத்தின் விளைவாக, நகர்ப்புறத்தில் வெப்ப விளைவுகள் அதிகரித்தல், காற்றின் தரம் குறைதல் மற்றும் பசுமைப் பகுதிகள் சுருங்கி விடுதல் போன்ற விளைவுகளுக்கு வழிவகுத்துள்ளது. வலுவான நகர்ப்புற பசுமைச் சூழலியல் அமைப்பு முறைகள் அல்லது நகர்ப்புற பசுமைப் பகுதிகள், பேரிடர் அபாயக் குறைப்பு (மழைநீர் வடிகால், வெள்ளத் தணிப்பு மற்றும் குறைக்கப்பட்ட வெப்பத்தீவு விளைவு போன்றவற்றின் வாயிலாக) மாசுக் கட்டுப்பாடு மற்றும் இரைச்சல் தணிப்பு, மேம்பட்ட பல்லுயிர் பெருக்கம், மனித உடல் மற்றும் மன நலன், சமூக ஒற்றுமை, நிலம் மற்றும் சொத்து மதிப்புகளின் உயர்வு, கார்பன் பிரித்தெடுத்தல் மற்றும் காலநிலைத் தழுவல் மீள்திறன் போன்றவை உள்ளிட்ட பல சமூகப் பயன்களை வழங்குகின்றன என்பதை அறிவியல் சார் இலக்கியங்களிலிருந்து அறிய முடிகிறது. இவை நிலையான, தாங்கி மீளும் இயல்புடைய நகரங்களுக்கு இன்றியமையாதவையாகும். இந்த உண்மையினை ஏற்றுக்கொண்டு, பன்னாட்டு மற்றும் தேசிய நிறுவனங்கள் நகர்ப்புற பசுமைப் போர்வையை உருவாக்குவதைக் கட்டாயமாக்கியுள்ளதுடன் ஒரு குடிமகனுக்கான பசுமைப் பகுதிகள், மொத்த புவியியல் பரப்பளவில் அதன் விழுக்காடு, அத்துடன் அணுகல்தன்மை மற்றும் இடஞ்சார்ந்த தொடர்ச்சி ஆகிய காரணிகளைக் குறிப்பிடும் தெளிவான வழிகாட்டுதல்களையும் வகுத்துள்ளன. நிலையான வளர்ச்சி இலக்கு 11.7, ''2030-ஆம் ஆண்டிற்குள், குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குப் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அணுகக்கூடிய வகையிலான பசுமை மற்றும் பொது இடங்களுக்கான முறையான வாய்ப்பினை அளிக்க வேண்டும்'' என்று நிபந்தனை விதிக்கிறது.

புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் (AMRUT) வழிகாட்டிக் குறிப்புகள், மொத்த நகர்ப்புற பரப்பளவில் 12% - 18% பசுமைப் போர்வையின் கீழ் இருக்க வேண்டுமென்று பரிந்துரைக்கிறது. 2014 - ஆம் ஆண்டு நகர்ப்புற வட்டார வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கம் மற்றும் செயல்படுத்துதல் (URDPFI) வழிகாட்டிக் குறிப்புகள், நபர் ஒருவருக்கு 10-12 சதுர மீட்டர் திறந்தவெளி/பசுமைப் பகுதி இருக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கின்றன.

விரைவான நகரமயமாக்கல் மற்றும் காலநிலை மாற்றத்தின் வளர்ந்து வரும் சவால்களைக் கருதிப்பார்த்து, நகரங்களுக்கு வலுவான மற்றும் தொலைநோக்கு பார்வையுடன் கூடிய நகர்ப்புற பசுமையாக்கல் கொள்கை தேவைப்படுகிறது, இது ஏற்கனவே மேம்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் சூழலியல் இடங்களைப் பொருத்துவது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நகர்ப்புற வளர்ச்சிகள் அனைத்தும் வலுவான சூழலியல் ஒருமைப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மீள்தன்மையுடன் திட்டமிடப்படுவதை உறுதி செய்கிறது. எனவே, நிலையான நகர மேம்பாட்டுடன் சூழலியல் சமநிலையை ஒருங்கிணைக்க மாநிலத்தின் நகர்ப்புற சூழல் அமைப்புகளுக்கு ஒரு கட்டமைக்கப்பட்ட பசுமைக் கொள்கை அணுகுமுறை அவசியமாகிறது. இந்த நகர்ப்புற பசுமையாக்கல் கொள்கையானது தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நகர்ப்புறங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் பசுமைப் போர்வையைத் திட்டமிடுதல், நிர்வகித்தல் மற்றும் பராமரிப்பதற்கு ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மாநிலத்தின் காலநிலை மாற்ற தொலைநோக்கு பார்வை, நிலையான வளர்ச்சி இலக்குகள் (இலக்கு 11: நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்) மற்றும் மாநிலத்தின் பசுமைப் போர்வையை 23.7 விழுக்காட்டிலிருந்து 33 விழுக்காடாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட பசுமைத் தமிழ்நாடு இயக்கத்துடன் இணக்கமாக அமைகிறது.



மாநிலத்தின் பசுமைப் பரப்பை 23.7% இலிருந்து
**33%**
ஆக அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட பசுமை தமிழ்நாடு இயக்கம்.

## 2. தொலைநோக்கு பார்வை

நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டின் ஒவ்வொரு அம்சத்திலும் மரங்கள், காடுகள் மற்றும் பசுமை உட்கட்டமைப்புகளை ஒருங்கிணைப்பதன் வாயிலாக, தமிழ்நாடு முழுவதும் செழிப்பான, மீள்தன்மை கொண்ட மற்றும் காலநிலை-திறன்மிக்க நகர்ப்புற சூழல் அமைப்புகளை உருவாக்குதல்.

## 3. திட்டம்

குடிமக்கள், நிறுவனங்கள் மற்றும் தொழில்சாலைகளுடன் இணைந்து நகர்ப்புறக் காடுகள், பூங்காக்கள் மற்றும் பசுமை வழித்தடங்களை மீட்டெடுப்பதை, விரிவாக்குவதை மற்றும் நிர்வகிப்பதை உள்ளடக்கிய, அறிவியல் சார்ந்த பசுமையாக்கல் முன்முயற்சிகளை ஊக்குவிப்பதன் வாயிலாக நகர்ப்புற வாழ்வாதாரத்தையும் சூழலியல் நிலைத்தன்மையையும் மேம்படுத்துதல்.

## 4. நோக்கம்

இக்கொள்கை தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மேம்பாட்டு அதிகார மன்றங்கள் மற்றும் நகர்ப்புறம் சார்ந்த மண்டலங்களுக்குப் பொருந்தும். இது, அனைத்து வகையிலான நகர்ப்புற பசுமை பூங்காக்கள், சாலையோரப் பாதைகள் / மரங்கள், நகர்ப்புற வனங்கள், ஈரநிலங்கள், கால்வாய்க் கரைகள், தொழிற்சாலை நிலப்பரப்புகள், நிறுவன வளாகங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. ஏரிகள், குளங்கள் மற்றும் ஆற்றுப்படுகை சார்ந்த தாவர பாதுகாப்பு மண்டலங்களும் இதில் அடங்கும்.


கோபசந்திரம் நர்சரி

## 5. இலக்குகளும் குறிக்கோள்களும்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்,

- நகர்ப்புற பகுதிகளில் பசுமையிடங்களின் எண்ணிக்கை, தரம் மற்றும் அணுகுத்தன்மையை அதிகரிக்கும்.
- அனைத்து மாநகரங்களுக்கான பெருந்திட்டங்களுடனும் நிலப் பயன்பாட்டு கட்டமைப்புகளுடனும் பசுமையாக்கலை ஒன்றிணைக்கும்.
- நகர்ப்புற பசுமையாக்கல் பராமரிப்பில் குடிமக்கள் பங்கேற்பையும் மேற்பார்வைப் பொறுப்புடைமையையும் ஊக்குவிக்கும்.
- முனைப்பான செயலாக்கத்திற்காக துறைகளுக்கிடையேயான முழுவதும் நிறுவன ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும்.
- உள்நாட்டு தாவரங்களை நடுவதன் வாயிலாக பல்லுயிர்வகைமைகளையும் சூழலியல் சேவைகளையும் அதிகரிக்கும்.
- புவியியல் மற்றும் எண்மிய கண்காணிப்பு முறைகளைப் பயன்படுத்தி மரங்கள் அமைந்துள்ள நகர்ப்புற பகுதிகளைக் கண்காணிக்கும்.
- தமிழ்நாட்டின் மற்றும் இந்தியாவின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகளின் செயல் திட்டங்களுக்குப் பங்களிக்கும்.

# 6. வழிகாட்டு நெறிமுறைகள்

சுற்றுச்சூழல் மீள்தன்மை, காலநிலை தகவமைப்பு மற்றும் நகர்ப்புற பகுதிகளின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்திற்கான தன்மையை மேம்படுத்தும் வகையில், மாநிலம் முழுவதும் அனைத்து நகர்ப்புற பசுமையாக்கல் நடைமுறைகளுக்குப் பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அவையாவன:

**1. உள்நாட்டு மற்றும் காலநிலை மீள்தன்மையுடைய தாவர இனங்கள்:**

மரம் நடுதல், நில வடிவமைத்தல், மற்றும் நகர்ப்புற காடு வளர்ப்பு தொடர்பான அனைத்து பணிகளிலும், உள்ளூர் பல்லுயிரிகளை வலுப்படுத்தும் மற்றும் நீண்ட கால பராமரிப்பு சுமையைக் குறைக்கும் நோக்கத்தில், உள்ளூர் வேளாண்-கால நிலைகளுக்கு ஏற்ற, வறட்சியை தாங்கிக்கொள்ளக்கூடிய மற்றும் மாசுபாட்டை தடுக்கக்கூடிய தாவர இனங்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.

**2. சூழலியல் சமநிலை:**

இந்த கொள்கையானது, சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும், குறிப்பாக குறைந்த வருவாய் ஈட்டக்கூடிய, அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகளில் வாழ்கிற, மற்றும் முறைசாரா குடியிருப்புகள் உட்பட அடிப்படை தேவைகள் சென்றடையாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு பொது திறந்தவெளி இடங்கள் மற்றும் பசுமை உட்கட்டமைப்பின் பயன்கள் சென்றடைவதை உறுதிச் செய்து, மாநகரம் முழுவதும் சமமான அளவில் பசுமை பகுதிகள் உருவாக்கத்தை ஊக்குவிக்கும்.

**3. நீலம் - பசுமை ஒருங்கிணைப்பு:**

நகர்ப்புற வெள்ள மேலாண்மை, நுண்-காலநிலை முறைப்படுத்துதல் மற்றும் காலநிலை மீள்தன்மையை அதிகரிக்கும் வகையில், நீர்நிலைகள், ஈரநிலங்கள், மழை நீர் வடிகால்கள் மற்றும் நீர்வடிகால் இணைப்புகள் உள்ளிட்ட நீர் அமைப்புமுறைகளுக்கும் சேர்த்து நகர்ப்புற பசுமையாக்கல் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

**4. சமுதாய பங்கேற்பு:**

பசுமை வளங்களைத் திட்டமிட்டு, செயற்படுத்தி, கண்காணித்து, பராமரிப்பதில் உள்ளூர் சமூகத்தினர், குடியிருப்பு நலச் சங்கங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், குடிமை சங்க அமைப்புகளின் முனைப்பான பங்கேற்பை நகர்ப்புற அமைப்பு ஊக்குவிக்க வேண்டும். இதனால், உரிமைப் பகிர்வையும் மேற்பார்வை பொறுப்புடைமையையும் அதிகரிக்க இயலும்.

**5. தரவு சார்ந்த முடிவெடுத்தல்:**

வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் முடிவுகளின் அடிப்படையிலான செயலாக்கத்தை உறுதி செய்வதற்காக, அனைத்து திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் அறிவியல் மற்றும் இடஞ்சார்ந்த தரவுகளுடன் அளிக்கப்பட வேண்டும்; இதில் செயற்கைக்கோள் காட்சிப் படங்கள், நகர மயமாக்கல் கணக்கெடுப்பு, புவிசார் குறியிடப்பட்ட (Geo-tagged) சேகரிக்கப்பட்ட தொடர்புடைய பதிவுகள் மற்றும் மின்னணு கண்காணிப்புத் திரைகள் (Dashboards) ஆகியவை அடங்கும்.




# 7. நிறுவனக் கட்டமைப்பு

**1. மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு:**


அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு மாநில அளவிலான நகரப் பசுமையாக்குதல் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, இக்குழு வனம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS), வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம், பொதுப்பணித்துறை (PWD), தோட்டக்கலை மற்றும் தொழில்துறை ஆகிய துறைகளுக்கிடையே திறன்மிக்க ஒருங்கிணைப்பை உறுதி செய்து, இக்கொள்கையை தடையின்றிச் செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

**2. மாநில அளவிலான ஒருங்கிணைப்பு முகமை (Nodal Agency):**

மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அதிகார வரம்பெல்லைகளில் நகரப் பசுமையாக்குதல் கொள்கையைச் செயல்படுத்துதல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிக்கும் பணியை மேற்கொள்வதற்காக நகராட்சி நிருவாகத் துறை, முதன்மை தலைமை வனப் பாதுகாவலரின் (வனப்படைத் தலைவர்) பிரதிநிதி, பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் (GTM) தலைமைத் திட்ட இயக்குநர் மற்றும் சுழற்சி முறையில் இரண்டு மாநகராட்சிகளின் ஆணையர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு மாநில அளவிலான ஒருங்கிணைப்பு முகமை செயல்படும்.

**3. நகர்ப்புற வனப் பிரிவு:**

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் (ULBs) நகர்ப்புறப் பசுமை மண்டலத்தை திட்டமிடவும், செயல்படுத்தவும், பராமரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறை தனிப்பட்ட நகர்ப்புற வனப் பிரிவு ஒன்றினை நிறுவும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட 'நகர்ப்புறப் பசுமையாக்குதல் பிரிவுகள்' (Urban Greening Cells) இந்தப் பிரிவின் கீழ் இயங்குவதுடன், இவை மரம் நடுதல் நடவடிக்கைகள், பசுமை மண்டலங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல், சமூகப் பங்களிப்பு மற்றும் விழிப்புணர்வுத்




திட்டங்களுக்குப் பொறுப்பாகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மாநில பல்லுயிர் வாரியத்துடன் கலந்தாலோசித்து, மாவட்டப் பசுமைக் குழுக்களின் அங்கீகாரத்தைப் பெற்று, 'நகர அளவிலான நகர்ப்புற பல்லுயிர் திட்டங்கள்' மற்றும் 'நகர்ப்புறப் பசுமையாக்குதல் நுண் திட்டங்களை' தயாரிக்கும். மேலும், இவை நகர்ப்புற நாற்றுப்பண்ணைகளை நிறுவி இயக்குவதுடன், பசுமைப் போர்வையின் நீண்டகால நிலைத்தன்மையையும் பராமரிப்பையும் உறுதி செய்யும். தொழில்நுட்ப முறையிலான சரியான திட்டமிடல் மற்றும் கள அளவிலான செயல்பாட்டை உறுதி செய்வதற்கு உதவி வனப் பாதுகாவலர்கள் மற்றும் வனச் சரகர்கள் உள்ளிட்ட வன அலுவலர்கள் இந்தப் பசுமையாக்குதல் பிரிவுகளில் அயற்பணி அடிப்படையில் (deputation) பணியமர்த்தப்படலாம்.

### 4. மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு:

துறைகளுக்கு இடையேயான செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், செயலாக்கத்தை வழிநடத்தவும், இக்கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் மாவட்ட அளவில் அவ்வப்போது ஆய்வு மற்றும் கண்காணிப்பை உறுதி செய்யவும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டப் பசுமைக் குழுக்கள் செயல்படும்.

### 5. புவிசார் வரைபடம் தயாரித்தல் மற்றும் மதிப்பீடு:

தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம் (TNGCC) புவிசார் வரைபடம் தயாரித்தல், கார்பன் கணக்கீடு, செயல்திறன் மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு தகவல் முகப்புகளை / தகவல் பலகைகளை உருவாக்குதல் ஆகியவற்றிற்குப் பொறுப்புடையதாகும்.

மேலும், மரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் பசுமைப் பரப்பு வரைபடம் தயாரித்தல் உள்பட நகர்ப்புறங்களில் பசுமைப் பரப்பை மதிப்பிடுதல், தேசிய அளவில் புகழ்பெற்ற ஒரு தொழில்நுட்ப / கல்வி நிறுவனம் வாயிலாக பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தால் மேற்கொள்ளப்படும்.

## 8. நிதி சார்ந்த ஏற்பாட்டு முறை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புற பசுமைப் பரப்பை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் உதவும் நோக்கில், இதற்கென அமைந்த நிதி ஏற்பாட்டு முறை ஒன்றை உருவாக்க வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படும் அனைத்து நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களின் வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிலான நிதி, நகர்ப்புற பசுமையாக்கல் நடவடிக்கைகளுக்காக மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும். மேலும், நகர்ப்புறப் பகுதிகளில் பணிகளைச் செயல்படுத்தும் அனைத்துத் துறைகளும் முகமைகளும் தங்கள் திட்டப்பணி மதிப்பீடுகளில் ஒரு விகிதாச்சாரப் பங்கை பசுமையாக்கல் மற்றும் நிலப்பரப்பு மீட்டெடுப்பிற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பசுமையாக்கல் நடவடிக்கைகளை வலுப்படுத்த, அம்ருத் (AMRUT), பொலிவுறு நகரங்கள் இயக்கம், தூய்மை இந்தியா இயக்கம் ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன், ஸ்வச் பாரத் மிஷன், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உள்ள திட்டங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய திட்டங்கள் போன்ற மத்திய மற்றும் மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்களிலிருந்து நிதிகள் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நமக்கு நாமே திட்டம் மற்றும் பிற சமூகப் பங்களிப்பு முயற்சிகளின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புகள் உட்பட, குடிமக்கள் மற்றும் பெருநிறுவனங்களின் பங்கேற்பையும் ஒன்றிணைக்க வேண்டும். மேலும், நகர்ப்புற பசுமையாக்கல் நடவடிக்கைகளுக்கு ஒரு நீடித்த மற்றும் நிலையான மற்றும் தொடர் நிதி ஆதாரத்தை உருவாக்க, கட்டட அனுமதி, மேம்பாட்டு அனுமதிகள் மற்றும் நகரத் திட்டமிடல் அனுமதிகளுடன் இணைக்கப்பட்ட பசுமைக் கட்டணம் / பசுமை வரி விதிப்பு குறித்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பரிசீலிக்கலாம்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு நகர்ப்புற மேம்பாட்டுப் பகுதியுடன் அல்லது அதற்கு அருகாமையிலமைந்த பகுதிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பசுமை உள்கட்டமைப்பின் அளவு மற்றும் தரம் இரண்டையும் அளவிடக்கூடிய ஒரு அளவீட்டு காரணியாக அமைந்துள்ள ‘‘நகர்ப்புற பசுமையாக்கல் காரணிகளை’’ எய்தியதன் அடிப்படையில் சலுகைகளை வழங்குவது குறித்து கருதிப் பார்க்கலாம். நகர்ப்புற பசுமையாக்கல் காரணி பொதுவாக மரங்களின் மேல்வரி பரப்பு நீர் உட்புகும் பரப்புகளின் அளவு, பசுமைக் கூரைகள் மற்றும் சுவர்கள், தெருவோர மரங்கள் மற்றும் கட்டமைப்புப் பகுதிகளில் பயனுள்ள தாவரப் பரப்பு போன்ற அளவீடுகளை மதிப்பிடுகிறது. இந்த பசுமையாக்கல் காரணிகளின் அடிப்படையில் செயல்திறனுடன் சலுகைகளை இணைப்பதன் வாயிலாக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சிறந்த பசுமைப் பரப்பு, பல்லுயிர் பெருக்க பங்களிப்பு, குறிப்பிட்ட இடத்தின் - காலநிலை ஒழுங்குமுறை மற்றும் வெள்ள நீர் மேலாண்மை ஆகியவற்றைச் செயல்படுத்தக்கூடிய மேம்பாட்டுப் பணிகளுக்கு வெகுமதி வழங்கலாம். இதன் மூலம் பல நாடுகள் பின்பற்றும் சிறந்த நடைமுறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட முடியும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பூங்காக்கள் மற்றும் நகர்ப்புற பசுமை இடங்களைப் பராமரித்தல், மேம்படுத்துதல் மற்றும் சீரமைப்பதற்காக ஒரு முன்முயற்சியை உருவாக்கிப் பின்பற்ற வேண்டும், இதன் மூலம் தனியார் மற்றும் பொதுத் துறைகள் இந்த பூங்காக்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

# 9. உத்திகள் மற்றும் செயல் திட்டம்

இந்தக் கொள்கையின் நோக்கங்களை அடைவதற்காக, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பின்வரும் உத்திகள் பின்பற்றப்பட வேண்டும்:

### A. நகர்ப்புற பசுமைப் பரப்பு இலக்குகள்

ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பும் (ULB), அம்ருத் (புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான உறுதியான திட்டம்) நெறிமுறைகள் மற்றும் தேசிய தரநிலைகளுக்கேற்ப, அதன் மொத்த நகராட்சிப் பரப்பில் குறைந்தளவு 15 விழுக்காட்டினை பசுமைப் போர்வையின் கீழ் பராமரிக்க வேண்டும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலியல் மற்றும் இடஞ்சார்ந்த நிலப்பரப்பிற்கேற்ப மாற்றியமைக்கப்பட்ட 3-30-300 நகர்ப்புற பசுமை வாழ்வாதார வழிகாட்டுதலின் திருத்தப்பட்ட பதிப்பை பின்பற்றலாம். இதன் வாயிலாக குடியிருப்புகளிலிருந்து மரங்கள் தெரியும் தன்மையை அதிகரிக்கவும், சுற்றுப்புறங்களில் மரக்கூட்டங்களின் அடர்த்தியை வலுப்படுத்தவும் மற்றும் பயன்படுத்தக்கூடிய பசுமை இடங்களுக்கு மக்கள் நடந்து செல்லும் தூரத்திலேயே இருப்பதை உறுதி செய்யவும் இயலும்.

### B. திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு

- நகர்ப்புற பசுமை உட்கட்டமைப்பு அடுக்குகளை பெருந்திட்டங்கள், உள்ளூர் பகுதித் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு விதிமுறைகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.
- புதிய அமைப்பு திட்டங்கள், நிறுவன வளாகங்கள், குழும மேம்பாடுகள் மற்றும் வணிக வளாகங்களுக்கான திட்டமிடல் அளவுகோலாக நகர்ப்புற பசுமையாக்கல் காரணியை (UGF) வகுத்து, அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- நகர விளிம்புப் பகுதிகளில், ஒரு குடியிருப்பாளருக்கு 10-12 மீட்டர்$^2$ பசுமை வெளி இடம் என்ற நகர்ப்புற மற்றும் வட்டார மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் (URDPFI) அளவுகோல்களையும், ஒவ்வொரு குடியிருப்புக்கும் 300-500 மீட்டருக்குள் ஒரு பசுமை இடத்தை அணுக முடிவதையும் உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து பெருந்திட்டங்கள் மற்றும் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களும், தற்போதுள்ள சூழலியல் உடைமைகள், திறந்தவெளிகள், மரத்தொகுப்பு மண்டலங்கள், நீர்நிலைகளின் பாதுகாப்பு மண்டலங்கள் மற்றும் சாத்தியமான பசுமையாக்கல் வழித்தடங்களைக் கண்டறியும் புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையிலான பசுமை உட்கட்டமைப்பு அடுக்கு கொண்டிருக்க வேண்டும். இது, குறிப்பாக வெப்ப அழுத்தம் மற்றும் குறைந்த பசுமைப் பரப்பு கொண்ட பகுதிகளில், பசுமையாக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான முதன்மை ஆதாரமாக இருக்க வேண்டும். மேலும், இது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு நாளதுவரையாக்கப்பட்டு இணையதள பொதுத் தகவல் முதன்மை பக்கங்களில் கிடைக்கப்பெற வேண்டும்.

### C. நாற்றுப்பண்ணை மேம்பாடு மற்றும் மரம் நடுதல்

- ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பும் நகர்ப்புற பசுமை நாற்றுப்பண்ணைகளை அமைத்து பராமரிக்க வேண்டும்.
- நிழல் தரும் மரங்கள், பூக்கும் மரங்கள், புதர்கள், படர்க்கொடிகள் மற்றும் தரைப் பசுமைவிரிப்புகள் உள்ளிட்ட பல்லடுக்கு தாவரங்களைக் கொண்ட உள்ளூர், நாட்டுரக, வறட்சியைத் தாங்கக்கூடிய, காலநிலை மாற்றத்திற்கேற்ற, மற்றும் பூச்சி/நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட தாவர இனங்களைப் பயன்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டும்.
- நடவு செய்யும் குழியின் அளவு, மண் தயாரித்தல், இயற்கை மூடாக்கு / மண் போர்வை, நீர்ப்பாசன கால அட்டவணை திட்டமிடல், முட்டுக்கொடுத்தல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான நிலையான விவரக்குறிப்புகளைப் பின்பற்ற வேண்டும்.
- குறைந்த இட வசதி கொண்ட இடங்களில் அடர்த்தியான நடவுகளை ஊக்குவிக்கவும் மற்றும் சமூக பங்களிப்புடன் கூடிய நகர்ப்புற காடுகளில் (நகர் வன்) நகர்ப்புற காடுகள் / (நகர் வாடிகா) நகர்ப்புற தோட்டங்கள் மாதிரிகளை பின்பற்ற வேண்டும்.
- வனத்துறை மற்றும் வனவியல் ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் இனங்களின் தேர்வு, நடவு வடிவமைப்பு, கிளைகழித்தல் / கிளை மேலாண்மை தரநிலைகள், இடர் மதிப்பீடு மற்றும் நீண்டகாலத்திற்கு மரங்களின் வாழ்நாளை நீட்டிக்கும் மேலாண்மைக்கான தொழில்நுட்ப நெறிமுறைகளை உருவாக்க வேண்டும்.

- மரங்களை அகற்றுவது மாவட்ட பசுமைக் குழுக்களால் கண்டிப்பாக வழிநடத்தப்பட வேண்டும். மரங்களை அகற்றும் இடங்களில், மறுநடவு செய்வதே முதல் விதிமுறையாக இருக்க வேண்டும்.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் (MoHUA) மரப் பூங்கா மற்றும் நகர்ப்புற வனகட்டமைப்புகளுடன் இணைந்து, சமூக மேம்பாட்டு நிலங்கள், திறந்த வெளி காப்பு நிலங்கள், நிறுவன வளாகங்கள், நகர்ப்புற விளிம்புநிலை இடையகப் பகுதிகள் மற்றும் நீர்நிலை விளிம்புகளில் மரப் பூங்காக்கள் / நகர்ப்புற பல்லுயிர் பூங்காக்கள் / நகர காடுகளை உருவாக்க வேண்டும்.
- தோட்டக்கலைத் துறை, அழகியல் மிக்க வடிவமைக்கப்பட்ட நிலப்பரப்பு தோட்டங்கள் மற்றும் பொது இடங்களை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பும் வெப்பத்தை தணிக்கக்கூடிய மற்றும் பசுமை குறைந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, குறைந்தளவு நகர அளவிலான ஒரு மரங்களடைந்த பூங்காவையும், வார்டு அளவிலான சுற்றுப்புற பொது பசுமைப் பகுதிகளையும் அமைக்க வேண்டும்.

### D. நிலப்பரப்பு மற்றும் நடைபாதை மறுசீரமைப்பு

- சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT), சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்(CMDA), பொதுப் பணித் துறை (PWD) மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கால்வாய்க் கரை, ஏரிக்கரை மற்றும் ஆற்றங்கரை ஆகிய பகுதிகளை பசுமையாக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.
- சுற்றுச்சூழல் இணைப்பு, வனவிலங்கு நடமாட்டம், நுண்ணிய காலநிலை ஒழுங்குமுறை மற்றும் வெள்ளத் தடுப்புத் திறனை மேம்படுத்துவதற்காக நகர்ப்புற பூங்காக்கள், ஈரநிலங்கள், கோயில் குளங்கள், ஆற்றங்கரைகள், கால்வாய் பகுதிகள்/ ஓரங்கள், நிறுவனகாலநிலை பொறுப்புகள் மற்றும் இயற்கை தாவரப் பகுதிகளை இணைக்கும் நீல-பசுமை வழித்தடங்களைத் திட்டமிடுதல், மீட்டமைத்தல் மற்றும் ஒன்றோடொன்று இணைத்தல்.

சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டுப் பணிகளின் போது பொருத்தமான நாட்டு மரங்களைத் தேர்வு செய்தல், தொடர்ச்சியான நிழல் பசுமை கூரை, சீரான இடைவெளி மற்றும் வேர் மண்டலப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிழற்சாலைத் திட்டங்களைத் தயாரித்தல்.

### E. சமூக பங்கேற்பு மற்றும் பொறுப்புடைமை

- நகர்ப்புற இயற்கை பண்பாடு, தோட்டக்கலை மதிப்பீடு மற்றும் பல்லுயிர் மேலாண்மையில் சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கு ஆண்டுதோறும் மாநகர் மலர் கண்காட்சி மற்றும் தோட்டக்கலை விழாவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
- பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில் சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்குதல் போன்ற ஊக்குவிப்புத் திட்டங்ள் நகர்ப்புற பசுமையாக்கும் கொள்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

### F. ஒருங்கிணைப்பு மற்றும் நிதியுதவி

- பசுமை தமிழ்நாடு இயக்கம், பசுமை இந்தியா இயக்கம், சீர்மிகு நகரத் திட்டம் மற்றும் அம்ருத் 2.0 ஆகியவற்றுடனும் தொடர்புடைய துறைசார் திட்டங்களுடனும் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட பசுமைக் கட்டணம் / பசுமை வரி / பசுமை நிதி வாயிலாக நிலையான நிதி திரட்டுதல்.





ஒட்டன்சத்திரம்

# 10. கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையளித்தல்

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பது நடவு செய்யப்பட்ட மரங்களின் எண்ணிக்கையை மட்டும் கணக்கிடாமல், திட்ட முடிவுகளில், குறிப்பாக பசுமை கூரை மேம்பாடு, சுற்றுச்சூழல் செயல்பாடு, காலநிலைக் கேற்றவாறு தகவமைத்துக் கொள்ளுதல், பொதுமக்கள் எளிதில் அணுகுதல் மற்றும் சமூக மேற்பார்வை ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

### A முக்கிய செயல்திறன் சமிக்ஞைகள்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பின்வரும் சமிக்ஞைகளின் அடிப்படையில் முன்னேற்றத்தைக் கண்காணித்து அறிக்கையளிக்க வேண்டும் :

i. பசுமைப் பகுதியின் கீழ் வரும் மொத்த நகராட்சிப் பகுதியின் விழுக்காடு (இலக்கு: குறைந்தளவு 15%).

ii. தனிநபர் பயன்படுத்தக்கூடிய பசுமைப் பகுதி மற்றும் பசுமை பகுதிகளுக்கான அணுகல்.

iii. நிலக்குறியீடு இடப்பட்ட மரங்களின் தணிக்கைகளின் அடிப்படையில் மரங்களின் உயிர்வாழ்வு விகிதம் ( குறைந்தளவு 80%).

iv. 10-20-30 மற்றும் 5-50-500 என்ற பல்லுயிர் அளவுகோல்களால் வழிகாட்டப்பட்டவாறான இனங்களின் பன்முகத்தன்மை மற்றும் நாட்டு இனங்களின் விகிதம்.

v. நீல-பசுமை வழித்தடங்கள் மற்றும் நீர் உணர்திறன் கொண்ட நிலப்பரப்பு மண்டலங்களின் பரப்பளவு மற்றும் தொடர்ச்சி.


vi. மரங்களடர்ந்த பூங்காக்கள்/நகர்ப்புற பல்லுயிர் பூங்காக்கள்/ நகர வனங்களின் திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் செயல்திறன்.

vii. சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய பங்கேற்பு (தன்னார்வலர்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், பள்ளிகள், சுய உதவிக் குழுக்கள்).

viii. பசுமைப்படுத்தலுக்காக திரட்டப்பட்ட பெருநிறுவன சமூகப் பொறுப்பு மற்றும் அரசு-தனியார் கூட்டாண்மை (PPP) பங்களிப்புகள்.

### B. மின்னணு கண்காணிப்பு மற்றும் தகவல் முகப்பு

- மரங்கள் நடப்படும் அனைத்து இடங்களும் பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் இணையதளம் வாயிலாக புவியிடக் குறியீடு செய்யப்பட வேண்டும்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மின்னணு முறையில் மரங்கள் குறித்த விவரப்பட்டியல் ஒன்றைப் வைத்துவர வேண்டியதுடன், மரங்களின் வளர்ச்சி மற்றும் உயிர்வாழும் தன்மை குறித்த விவரங்களை குறிப்பிட்ட கால அளவிற்கொருமுறை நாளதுவரையாக்க வேண்டும்.
- பாரம்பரிய மரங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாரம்பரிய மரப் பதிவேடு வாயிலாகப் பாதுகாக்க வேண்டும்.
- வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காகவும், சமூகக் கண்காணிப்பைச் செயல்படுத்துவதற்காகவும் புவித் தகவல் அமைப்பு சார்ந்த பசுமைவெளி புவி வரைபடங்கள், பொதுத் தகவல் முகப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.



### C. மதிப்பீடு மற்றும் தணிக்கை ஏற்பாட்டுமுறை

- மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட பசுமைக் குழுக்களால் காலாண்டு முன்னேற்ற ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கல்வியியல், வனவியல் அல்லது இடஞ்சார்ந்த பகுப்பாய்வு நிறுவனங்களின் உதவியுடன் தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தால் (TNGCC) இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை பசுமைப் பரப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

### D. மாநகர பல்லுயிர்ப் பெருக்க மதிப்பீட்டு அட்டை

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பல்லுயிர்ப் பெருக்க நிலை, சுற்றுச்சூழலுடனான தொடர்பு, நிர்வாகத்திறன் மற்றும் சூழலியல் சேவைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கு மாநகர பல்லுயிர்ப் பெருக்கக் குறியீட்டை (சிங்கப்பூர் குறியீடு) பின்பற்றுவது குறித்து கருதிப்பார்க்க வேண்டும்.
- மேம்பாட்டு முன்னுரிமைகள் மற்றும் காலநிலை மாற்றத் தகவமைப்புத் திட்டமிடலுக்கு வழிகாட்டும் பொருட்டு ஒவ்வொரு 2 ஆண்டுகளுக்கொருமுறை மாநகர பல்லுயிர்ப் பெருக்க மதிப்பீட்டு அட்டை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

### E. பொதுமக்களுக்குத் தெரிவித்தல்

- முக்கிய செயல்திறன் குறியீடுகளுக்கு நிகரான செயல்பாடுகள், பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான முடிவுகள், சமூக ஈடுபாட்டு முயற்சிகள், திரட்டப்பட்ட நிதி, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளுதல் ஆகிய விவரங்களைக் கொண்ட நகர்ப்புற பசுமை ஆண்டறிக்கையை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வெளியிட வேண்டும்.
- குடிமக்களின் பங்கேற்பு மற்றும் பொறுப்புடைமையை ஊக்குவிக்குவதற்கு சுருக்கமான தகவல் முகப்புகள் பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள உத்திகள் படிப்படியாகவும் தரவு அடிப்படையிலும் செயல்படுத்தப்பட வேண்டும், மேலும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பின் வாயிலாக அதன் முன்னேற்றம், கண்காணிக்கப்பட வேண்டும்.

# 11.முக்கிய சொற்களின் விளக்கம்

**1. நகர்ப்புற பசுமைக் காரணி :** இது கட்டிடங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் மரங்களின் மேல்வரி பரப்பு, நீர் ஊடுருவக்கூடிய மேற்பரப்புகள், பசுமைக் கூரைகள் மற்றும் சுவர்கள் (green roofs & walls), சாலையோர மரங்கள், மற்றும் செயல்திறன் வாய்ந்த தாவரப் பரப்பு போன்ற அளவுகோல்களை மதிப்பீடு செய்கிறது.

**2. 3-30-300 நகர்ப்புற பசுமை வாழ்திறன் வழிகாட்டுதல்:** இது ஸ்வீடனில் உள்ள இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் நிறுவனம் முன்மொழிந்த, பசுமைமிக்க, ஆரோக்கியமான மற்றும் தாங்குதிறன் கொண்ட நகரங்களை உருவாக்கும் வழிகாட்டுதலாகும். இதன் படி:

**3:** ஒவ்வொருவரும் தங்கள் வீடு மற்றும் வேலை செய்யும் அல்லது படிக்கும் இடத்திலிருந்து குறைந்தது 3 முதிர்ந்த மரங்களை பார்க்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

**30:** ஒவ்வொரு குடியிருப்பு பகுதிக்கும் குறைந்தது 30% மரங்களின் மேல்வரி பரப்பு இருக்க வேண்டும்.

**300:** உயர்தரமான பொதுப் பசுமை வெளி அருகிலுள்ள இடத்திற்கு அதிகபட்ச தூரம் 300 மீட்டராக (>1 ஹெ) இருக்க வேண்டும்.


**3. 10-20-30 விதி :** இது 1990 ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட ஒரு பொதுவிதி (rule of thumb) ஆகும். இனம் அல்லது பேரினம் (genus) சார்ந்த பூச்சி மற்றும் நோய்களுக்கு எதிராக நகர வனங்களின் தாங்குதிறனை மேம்படுத்துவதற்காக இது பயன்படுத்தப்படுகிறது.

- **10% (இனம்):** எந்த ஒரு இனமும் நகர்ப்புற மரங்களின் மொத்த எண்ணிக்கையில் 10% க்கும் அதிகமாக இருக்கக் கூடாது.
- **20% (பேரினம்):** எந்த ஒரு பேரினமும் மொத்த எண்ணிக்கையில் 20% க்கும் அதிகமாக இருக்கக் கூடாது.
- **30% (குடும்பம்):** எந்த ஒரு குடும்பமும் மொத்த எண்ணிக்கையில் 30% க்கும் அதிகமாக இருக்கக் கூடாது.

**4. 5-50-500 விதி :** இந்த எண்கள் பாதுகாப்பு உயிரியல் (Conservation Biology) துறையில், குறிப்பாக மக்கள்தொகை வாழ்திறன் பகுப்பாய்வில் (Population Viability Analysis), குறைந்தபட்ச மக்கள்தொகை அளவுகளுக்கான பொதுவான வழிகாட்டுதல்களாக குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டாயமான, உலகளாவிய அறிவியல் சட்டங்கள் அல்ல.

- **5 (குறுகிய காலத்தில் இனப்பெருக்க கலப்பு குறைவைத் தவிர்க்கும் குறைந்தபட்ச மக்கள்தொகை):** வரலாற்று ரீதியாக, உடனடி மற்றும் கடுமையான இனப்பெருக்க கலப்பு குறைவைத் தவிர்க்க 5 இனப்பெருக்க உறுப்பினர்கள் போதுமானது என கருதப்பட்டது. ஆனால் நீண்டகால வாழ்திறனுக்கு இது போதுமானதல்ல என தற்போது கருதப்படுகிறது.
- **50 (குறுகிய கால வாழ்விற்கு குறைந்தபட்ச மக்கள்தொகை):** எதிர்வரும் காலத்தில் இனப்பெருக்க கலப்பு ஒரு பெரிய பிரச்சினையாக மாறாமல் இருக்க, சுமார் 50 உறுப்பினர்கள் தேவைப்படுவர் என பொதுவாக குறிப்பிடப்படுகிறது.
- **500 (நீண்டகால மரபணு பல்வகைமையைப் பேண தேவையான குறைந்தபட்ச செயல்திறன் மக்கள்தொகை):** குறைந்தது 500 (அதாவது 500 இனப்பெருக்க உறுப்பினர்கள்) என்ற அளவு, நீண்டகாலத்தில் போதுமான மரபணு பல்வகைமையும், சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப தழுவும் திறனையும் பேணுவதற்குத் தேவையான பொதுவான அளவுகோலாக பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**5. நகர உயிரியல் பல்வகைமை குறியீடு:** நகரங்களின் பல்லுயிர் பெருக்கத்திற்கான சிங்கப்பூர் குறியீடு எனவும் அழைக்கப்படும் இது, நகரங்கள் தங்களின் நகர உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு முயற்சிகளை மதிப்பீடு செய்யவும், கண்காணிக்கவும், காலப்போக்கில் தங்களின் அடிப்படை நிலைகளுடன் ஒப்பிட்டு அளவிடவும் உதவும் ஒரு சுய-மதிப்பீட்டு கருவியாகும்.



பாரம்பரிய மரம், ஐஐடி, சென்னை